DEPOSITION OF WITNESS.
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. 2, SIVAKASI
Case No. CC. 214/2020
**Depositions of PW 3 Witness for**

| | | | |
|---|---|---|---|
| Name | மணிகண்டன் | Caste | |
| Father's name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th Day of October 2025

Signature of Witness.

**07.10.2025**
எதிரி ஆஜர்.
**முதல் விசாரணை**

நான் தற்போது சிவகாசி, போஸ் காலனியில் குடியிருந்து வருகிறேன். அச்சு அலுவலகத்தில் வேலை பார்த்து வருகிறேன். இவ்வழக்கின் விபத்தில் இறந்து போன பால்பாண்டி என்பவரை எனக்கு தெரியும். அ.சா.1 ராஜா மற்றும் அ.சா.2 கனி ஆகியோர்களை தெரியும். கடந்த 04.01.2020 ஆம் தேதியன்று இரவு 09.20 மணிக்கு மேல் இருக்கன்குடிக்கு பாதையாத்திரையாக நான், பால்பாண்டி, அ.சா.2 கனி ஆகியோர் சென்று கொண்டிருந்தோம். நாராணபுரம் சாலையில் இரவீந்தரா குழாய் கடை அருகே செவன்த்டே பள்ளியை அடுத்து நடந்து போகும் போது பால்பாண்டிக்கு இடது பக்கம் அ.சா.2 கனியும், வலது பக்கம் நானும் நடந்து சென்றோம். அப்போது எங்களுக்கு பின்புறமாக வந்த ஒரு இருசக்கர வாகனம் நடுவில் வந்த பால்பாண்டி மீது மோதி பால்பாண்டியை தூக்கிவீசியது. பால்பாண்டியின் ஒரு பக்க காதின் பகுதி தனியாக கிழிந்து தொங்கியது. மூக்கில் இருந்து இரத்தம் வழிந்தது. விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்களும் அதிக மதுபோதையில்

இருந்தார்கள். விபத்து ஏற்பட்டதும் நாங்கள் அடிப்பட்ட பால்பாண்டியை துாக்குவதில் கவனம் செலுத்தியதால் விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தில் வந்த நபர்களின் முகத்தை சரியாக அடையாளம் காணஇயலவில்லை. விபத்தில் அடிப்பட்ட பால்பாண்டியை ஒரு ஆட்டோவில் ஏற்றி சிவகாசி, பேருந்து நிலையம் முன்புள்ள சுப்புராஜ் மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு பால்பாண்டியை பரிசோதித்து விட்டு உயிர் ஏற்கனவே பிரிந்துவிட்டது என்று சொன்னதால் சிவகாசி அரசு மருத்துவமனைக்கு பால்பாண்டியை கொண்டு சென்றோம். அங்கு பால்பாண்டியை பரிசோதித்து அவரது இறப்பினை உறுதிசெய்தனர். விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் கல்குவாரி பகுதியை சார்ந்தவர் என்று தெரிந்து கொண்டேன். அவரது பெயர் தெரியவில்லை. இது சம்பந்தமாக போலீஸ் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எத்தனை பேர் பாதயாத்திரையாக இருக்கன்குடிக்கு சென்றோம் என்றால் மூன்று பேர் சென்றோம். வழக்கமாக சென்றோமா அல்லது மாலை போட்டு சென்றோமா என்றால் திருச்செந்துாருக்கு மாலை போட்டு இருக்கன்குடிக்கு சென்றோம். போலீசாரிடம் அளித்த வாக்குமூலத்தில் திருச்செந்துாருக்கு மாலை போட்டு இருக்கன்குடிக்கு சென்றோம் என்ற விவரத்தை சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன். சிவகாசி– நாராணபுரம் சாலை இருள்மிகுந்த பகுதி என்றால் சரிதான். எங்களுக்கு பின்னால் வந்த இருசக்கர வாகனம் மோதி தான் விபத்து ஏற்பட்டது என்ற விவரத்தை போலீசார் விசாரணையின் போது சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சத்தம் கேட்டு தான் திரும்பி பார்த்து எந்த வாகனம் இடித்தது என்றும் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். மோதியதாக கூறப்படும்

வாகனம் எவ்வாறு வந்தது என்பதை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி விவரங்களை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

DEPOSITION OF WITNESS.
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. 2, SIVAKASI
Case No. CC. 214/2020
**Depositions of PW 4 Witness for**

| | | | |
|---|---|---|---|
| Name | வரதன் (எ) வரதராஜன் | Caste | |
| Father's name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th Day of October 2025

Signature of Witness.

**07.10.2025**
எதிரி ஆஜர்.
**முதல் விசாரணை**

நான் தற்போது சிவகாசி, போஸ் காலனியில் குடியிருந்து வருகிறேன். ஆட்டோ ஓட்டும் வேலை பார்த்து வருகிறேன். இவ்வழக்கின் விபத்தில் இறந்து போன பால்பாண்டி மற்றும் அ.சா.1 ராஜா, அ.சா.2 கனி, அ.சா.3 மணிகண்டன் ஆகியோர்களை தெரியும். எனது பகுதியில் தான் வசித்து வருகிறார்கள். கடந்த 04.01.2020 ஆம் தேதியன்று இரவு 09.15-09.20 மணிக்கு செவன்த்டே பள்ளிக்கு அருகில் உள்ள ஒரு பட்டாசு கடையில் உட்கார்ந்து எனது நண்பர் பாலகுருசாமி என்பவருடன் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது ஒரு இருசக்கர வாகனம் வேகமாக சென்றது. அந்த இருசக்கர வாகனம் இருக்கன்குடிக்கு பாதயாத்திரை சென்ற பால்பாண்டி மீது மோதி விபத்து ஏற்பட்டது, அதனை பட்டாசு கடையில் உட்கார்ந்திருந்த போது பார்த்தோம். பால்பாண்டியுடன் அ.சா.2 கனி, அ.சா.3 மணிகண்டன் ஆகியோரும் உடன் சென்றிருந்தனர். விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபரும் அடிப்பட்டு கீழே மயக்க நிலையில் கிடந்தார். அந்த இருசக்கர வாகனத்தில் இரண்டு

நபர்கள்வந்திருந்தார்கள். விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் கல்போதுவை சார்ந்த அந்தோனிகுரூஸ் என்று தெரிந்து கொண்டேன். அடிப்பட்ட பால்பாண்டியை ஒரு ஆட்டோவில் ஏற்றி மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். விபத்து ஏற்படுத்திய வாகனத்தில் வந்த அடிப்பட்ட நபரையும் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

போலீசார் விசாரணையின் போது நான் எனக்கு சொந்தமாக ஆட்டோ ஓட்டும் தொழில் செய்து வருகிறேன் என்ற விவரத்தை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் எத்தனை மணிக்கு ஆட்டோ ஓட்டும் தொழிலுக்கு சென்று எத்தனை மணிக்கு வீடு திரும்புவேன் என்றால் காலை 09.00 மணிக்கு சென்று இரவு 09.00 மணிக்கு வீடு திரும்புவேன். எனது ஆட்டோவை வீட்டிலிருந்து ஓட்டிச் செல்கிறேனா அல்லது ஆட்டோ ஸ்டாண்டிலிருந்து ஓட்டிச் செல்வேனா என்றால் ஆட்டோ ஸ்டாண்டிலிருந்து ஓட்டிச் செல்வேன். எனது வீட்டிலிருந்து ஓம் முருகா பட்டாசு கடை எவ்வளவு துாரத்தில் அமைந்துள்ளது என்றால் சுமார் 1/2 கி.மீ துாரத்தில் உள்ளது. அந்த இடத்திற்கு 10 நிமிடத்தில் சென்றுவிடலாம். சிவகாசி–நாரணாபுரம் சாலை இருளான பகுதி என்றால் சரிதான். ஓம் முருகா பட்டாசு கடை எந்த திசையை நோக்கி உள்ளது என்றால் மேற்கு பக்கம் நோக்கி உள்ளது. பட்டாசு கடைக்கு எதற்காக சென்றோம் என போலீசார் விசாரணையின் போது சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை, ஆனால் தற்செயலாக தான் சென்றோம்.

2) விபத்து நடந்த இடத்திலிருந்து ஓம் முருகா பட்டாசு கடை எவ்வளவு துாரத்தில் அமைந்துள்ளது என்றால் 50 மீட்டர் இடைவெளியில்

உள்ளது. டமார் என சத்தம் கேட்டு தான் நான் திரும்பி பார்த்தேன் என்றால் சரிதான். எந்த வாகனம், எவ்வளவு வேகத்தில் வந்தது, எப்படி இடித்தது என்பதை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். எதிரியை நான் நேரடியாக பார்த்தில்லை என்றால் சரிதான். எதிரியின் பெயர் எவ்வாறு தெரியும் என்றால் போலீசார் சொன்னதன் பேரில் தெரியும். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் பட்டாசு கடையில் அமர்ந்து பேசிக்கொண்டு இல்லை என்றாலும், இறந்து போனவர் எனது பகுதியில் வசிப்பவர் என்பதால் அவரது குடும்பத்தினருக்கு இழப்பீடு கிடைக்க வேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS.
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. 2, SIVAKASI
Case No. CC. 214/2020
**Depositions of PW 5 Witness for**

| | | | |
|---|---|---|---|
| Name | முருகன் | Caste | |
| Father's name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th Day of October 2025

Signature of Witness.

**07.10.2025**
எதிரி ஆஜர்.
**முதல் விசாரணை**

நான் தற்போது சிவகாசி, பர்மா காலனியில் குடியிருந்து வருகிறேன். ஓட்டுநராக வேலை பார்த்து வருகிறேன். விபத்தில் இறந்து போன பால்பாண்டியை தெரியும். எனது பக்கத்து ஏரியாவில் தான் வசித்து வந்தார். கடந்த 05.01.2020 ஆம் தேதியன்று இரவு 12.45 மணியளவில் இருசக்கர வாகனத்தில் நாரணாபுரத்திலிருந்து பர்மா காலனியில் உள்ள எனது வீட்டிற்கு வந்துகொண்டிருந்தேன். அப்போது என்னுடன் எனக்கு தெரிந்த ராஜா என்பவரும் என்னுடன் வந்தார். உதவி ஆய்வாளர் ஒருவர் விபத்து நடந்த இடத்தை பார்வையிட்டு படம் வரைந்தார். பின்னர் என்னையும், ராஜாவையும் உதவி ஆய்வாளர் சிவகாசி கிழக்கு காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு வைத்து பார்வை மகஜர் ஆவணத்தில் காவல் நிலையத்தில் வைத்து நானும், ராஜாவும் கையொப்பம் செய்து கொடுத்தோம். சாட்சியால் கையொப்பம் செய்து கொடுத்த பார்வை மகஜர் ஆவணம் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(சாட்சி அரசு தரப்பிற்கு எதிராக பகுதி பிறழ் சாட்சியம் அளிப்பதால் அவரை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது. )

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவ இடத்தில்வைத்து பார்வை மகஜர் ஆவணத்தில் நானும், ராஜாவும் கையொப்பம் செய்துவிட்டு தற்போது காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து கொடுத்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.